1245

உ

கணபதி துணை.

# த்த ரூபாதி தசகாரிய அகவல்.

பாச தசகாரியம்.

ன்ம தசகாரியம்.

ப தசகாரியம்.

Q23.47
M27.
183624

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீகண்ட சந்தான சாம்பிரதாய அவிச்சின்ன

ஞான பீடாதிபதியாகிய

திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

ஆதி குருமூர்த்தி

ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல்

ஷை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ

சுப்பிரமணியதேசிகபரமாசாரியசுவாமிகள்

ஆக்ஞைப்படி

வித்வான் சட்டைநாதத்தம்பிரான் சுவாமிகள்

மேற்பார்வையில்

ஸ்ரீகாழி, வித்வான்

ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்களால்

சீகாழித் திரிபுரசுந்தரி அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பெற்றது.

பிரபவ ௵ ஆவணிமீ ௨௬௨

பிரதி ௫ணா.] [காப்பிரைட்.

1927.

Printed at the
THIRUPURASUNDARI PRESS,
SHIYALI.

# பிரசுரம்.

சிவாநுபவ முற்றிய சிவஞானச் செல்வர் உண்மைநிலையைத் திரிபதார்த்தங்களினது உருவமாதி தசகாரியங்கள் வாயிலாக உணர்த்துதல் வேண்டுமென்பது சைவாகமங்களுட் டுணிபு. இத்திறத்தசகாரியநூல்களுள் தருமையாதீனத்து ஆதிகுருமூர்த்தி சுவாமிகள் அருளிய தசகாரிய அகவலே மிகச் சீரியது என்பது இந் நூற்பொருளை நோக்குவார்க்குத் தெள்ளிதிற் புலனாம். ரூபாதி என்ற தொடர்மொழி உருவம் ஆதிய பத்துக்காரியங்கள் எனப் பொருள்படும். அவை பதிப்பொருட்கே யன்றிப் பசுபாசங்கட்குமாம் என்பது 'மேவுருப சொரூபசுபா வம்விசேடம் வியாத்தி, தாவுவியா பகங்குணமே வன்னந்தான்— ஓவுந், தெரிசனஞ்-சுத்தியெனச் சேர்பவை பத்து, மருள்பசுபா சங்கட்கு மாம்' என்ற வெண்கலிப்பாவா லறியப்படும். இந் நூல் ரூபத்திற்கு ஆதி யாகிய ஆறினையும், ரூபத்தை யாதியாகக் கொண்ட நான்கினையும் சுபாவ முதலாகக்கூறும்; பாசத்தை இப் பத்துவகையானும், பசுவை அப்

பத்தின்மேல் லாபத்தைச் சேர்த்துப் பதினொரு வகையானும், பதியைச் சுத்தி நீக்கி யோக போகங்களைச் சேர்த்துப் பதினொரு வகையானும் தொகுத் துரைக்கும். திரி பதார்த்தங்களையும் பத்துவகையா லாராயும் இதர நூல்கள் ரூபத்தை வன்னமென்றும், சிவயோக சிவபோகங்களைச் சுத்தியென்றும் உரைக்கும்.

பரமாசாரிய சுவாமிகள் நியமனப்படி இச் சிறந்த சிவானுபவத் திருநூலைக் கற்றல், கேட்டல்களுக்கின்றியமையாத திருவெண்பாக்களும், மேற்கோள் திருவிருத்தங்களும் தெளிபொருள் விளக்கத்தோடு விரைவின் வெளிவரும்.

உ

குருபாதம்.

திருச்சிற்றம்பலம்.

# திரிபதார்த்த ரூபாதி

# தசகாரிய அகவல்.

ஸ்துதி.

சித்தி தருநாதன் றென்கமலே வாழ்நாதன்
பத்திதரு நாதன் பரநாதன்—முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாச னுண்மை
தருநாத னங்குருநா தன்.

நூல்.

## பாச தசகாரியம்.

பதிபசு பாசத் தொகுதச காரியம்
விதிபெற வுரைப்பன் விரும்பிக் கேண்மின்
பாச சுபாவம் பாச வியாத்தி
பாச வியாபகம் பாசத் தின்குணம்

பாச விசேடம் பாச ரூபகம்
பாச ரூபம் பாச சொரூபம்
பாச தெரிசனம் பாச சுத்தியென்
ருகி யொருபது வகைவிரி யறிமின்
நீடு சுபாவம் நிறைவறி வின்மை
நாடு வியாத்தி நவிலா ணவமலம்
மாயை காமியம் மாமாயை திரோத
மேய வைவகை வியாபக முரைக்கில்
ஆணவம் ஒன்று யனைத்துயி ரிடத்துங்
காணு வியாத்தியாய்க் கலந்து நிற்கும்
மாயை ஒன்றாய் வடிவற நிற்க
வாய தனுமுத லாகியு நிற்குங்
கன்ம மொன்றாய்க் காசற நிற்கப்
பண்ணிய சஞ்சித பாவ புண்ணியம்
பொருந்திய பிராரத்த புண்ணிய பாவம்
விரும்பிய நால்வகை விளங்கியு நிற்கும்
ஒப்பின் மாமாயை யொன்றாய் நிற்கத்
தப்பறு சுத்த தத்துவ மாகியும்
சகல சாத்திரந் தானுமாய் நிற்கும்
இகலறு திரோதம் இருக்க வொன்றாய்
மருவு முயிரினை மறைப்பித்து நிற்கும்

திருந்திய குணமது சடமா யிருக்கை
விசேட மதுதான் மெய்ச்சட மாகிலும்
விசேட மாகிய வினைசெயப் படுதல்
இகலறு ரூபக மித்தன்மை யெல்லாம்
பலவற வொன்றாய்ப் பரந்து நிற்கும்
பாச முளவெனப் பற்றி நிற்றல்
ஆசறு ரூபம் அதுதா னடுத்துத்
தேக வடிவாய்த் திகைப்புற நிற்கை
வாகை சொரூபம் மன்னுயிர் தனக்கு
வடிவிற் காளிதம் மன்னுதல் போலச்
சடமது வாகிலுந் தான்மறைப் பிக்கும்
உடலிற் கொண்ட வுருவிடம் போல
மடமை நணியாய் மயக்கு விக்கும
தவிராத் தண்டந் தானது போல
உயராப் பொசிப்பா யூட்டுபு வருத்தும்
தேரிற் பாகன் செலுத்துதல் போலப்
பேரா நின்று பிரேரிப் பிக்கும்
இருளுக் கிருள்போ லெங்கு மொக்கப்
பிரிவற நிற்கும் பேரந்த காரம்
ஆகியு நிற்கு மாசறு தெரிசனம்
பாகற நின்று படுமுயிர் பொய்யை

மிச்சை யென்று வினவா தன்றி
நிச்சய மாக நீள்வடி வறியாப்
பிரமந் தானே பிறிதில்லை யென்று
மருளைச் சிவனை யறியா தாகி
யிதமு மகிதமு மினிதுற வயின்று
சிதமற நிற்குந் தெரிசன மிதுவே
சுத்தி யாவது தொல்லை யிறையையு
நித்த பாசமும் நேர்பணி யில்லை
யென்னு மதுவு மிவையுயி ரல்ல
மன்னுயிர் வேறென மதிப்பது கடனே.

---

## ஆன்ம தசகாரியம்.

ஆத்ம சுபாவம் ஆத்ம வியாத்தி
ஆத்ம வியாபக மாத்மா வின்குணம்
ஆத்ம விசேடம் ஆத்ம ரூபகம்
ஆத்ம ரூபம் ஆத்ம சொரூபம்
ஆத்ம தெரிசனம் ஆத்தும சுத்தி
ஆத்தும லாப மாயவை பன்னொன்

ருத்தும சுபாவ மனவர தமுமே
சாற்று தத்துவம் தானய்க் கூடுதல்
வியாத்தி தத்துவ வவாவுள் ளளவும்
வியாத்த மாகி விடயத் திருத்தல்
வியாபகந் தத்துவ மிக்குள் ளளவும்
வியாபகந் தானய் மேலிடு முயிரே
குணமும் மடமாங் கோதில் விசேடம்
குணமறி யாமை குறுகி யிருக்க
விருண்மல பக்குவம் எய்திய போதில்
அருளிறை யுணர்த்த வறிவாய் விடுதல்
உற்ற ரூபகம் உடம்பே யொழிய
மற்றுயி ருண்டென வாய்மை பொருந்துதல்
உரூப மிச்சை யுயர்ஞா னங்தொழில்
சொரூப மாகித் துனியுற் றிருத்தல்
இச்சை பதார்த்த மிராக மாத்தன்
னிச்சய ஞானம் நிகழ்பண் டங்களில்
பகுத்தறி வாகை பகருங் கிரியை
மிகுத்த பதார்த்த மிகவப கரிக்கை
சொரூபம் மெய்போற் றோன்று தேகாதி
உருவ மிந்திர வுயர்தனுப் போலும்
பொய்யென வுணர்த்தப் பொருந்துத ருனே

மெய்யுயிர்த் தெரிசனம் விரிவறி வாகை
சுத்தி யுரைக்கிற் றெழிலறி விச்சை
மத்த வுணர்வும் மட்டற விட்டே
யுணர்வு மசைவு மொன்றற நிற்றல்
புணர்வி லாபம் புகலுங் காலை
நிரஞ்சன மாகி நின்றவ தாத்தில்
உரமற விளைந்த வுயரா னந்த
போகம் புணர்ந்து பொருந்துத ருணென
ஆகம மெல்லா மறைந்தன மாதோ.

---

## சிவ தசகாரியம்.

சிவ சுபாவம் சிவ வியாத்தி
சிவ வியாபகம் சிவத்தின் றன்குணம்.
சிவ விசேடம் சிவ வுருபகம்
சிவ வுருபம் சிவ சொரூபம்
சிவ தெரிசனஞ் சிவ வியோகம்
சிவனது போகந் தெரித்தபன் னொன்றில்
சுபாவம் தத்துவத் துரிசற நிற்கை
விபாவ வியாத்தி விரிபுவ னத்திலும்

சகல வுயிரிலுந் தடையற நிற்கை
இகலறு வியாபகம் எங்கும் நிறைந்தே
விமல நிராமய மேவிய நிலையில்
தமதி லிரண்டறத் தங்கி யடங்கிய
உயிரீ டேற்று முபாயகா ரணமாய்ப்
பயிறிரு மேனி படிமிசைக் கோடல்
குணமெந் நாளுங் குன்று வறிவாம்
புணரும் விசேடம் பொருந்த வுரைக்கில்
அறிவுக் கறிவு மன்றி யசேதனம்
பிறிவறத்தொழிற்செயல்பெற்றியுண்டாக்குகை
தீதறு ரூபகம் திகழறி வுக்குக்
கோதறு முயிராய்க் கூடா நிற்பன்
பரம மாகிய பரனெனத் தோன்றுதல்
விரியு முரூபம் விளங்கப் புகலில்
இச்சா ஞான மிருந்தொழி லான
நிச்சய ரூபமாய் நிலைபெற நிற்கை
இச்சை யுயிர்களை யிரட்சிப் பதுவாய்
மிச்சையி லாசை விரிவது தானே
ஞான மகில ஞால முயிர்கள்
யானங் கைக்கனி மதித்தன மான
வொருகா லத்தி லுணர்ந்தே யிருத்தல்

R23:4N7

கிரியா சத்தி கிளருயிர் களையும்
தேக மிந்தியங்கள் திகழ்வுறக் கூட்டிப்
போக கன்மங்களைப் பொசிப்பித்து நிற்கும்
சொரூப மொன்றொடுந் தோயா திருத்த
லிலகறு தெரிசன மெழினிரு விகற்ப
மெங்கும் பூரண வெழிலுற நின்ற
சங்கமில் வடிவைத் தானறக் காண்கை
யோகம் செப்பி லுயரா னந்த
யோக மாக வொழிவறத் தோன்றல்
போக முன்னைப் புகன்ற விலாபம்
ஆக வாகம மறைந்த திதுவெனத்
தேசிக சிகாமணி தென்கம லாபுரி
நாசமில் சீர்த்தி ஞானப் பிரகாசன்
அருளிய அட்ட வணையி னடைவே
பெரிதும் பயனுறப் பேசின னறியே.

திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல்
முற்றும்.

ஸ்ரீ குருஞானசம்பந்தசுவாமிகள்
திருவடிவாழ்க.